# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழுச் சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 30/2009)
(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Metropolitan Planning Committee Act, 2009
## (Tamil Nadu Act No. 30 of 2009)
(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள்
அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 30/2009)

பிரிவு பொருளடக்கம்

### அத்தியாயம் –I

### முன்னுரை


1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.


### அத்தியாயம் –II

### பெருநகர் திட்டக்குழுவை அமைத்துருவாக்குதலும், அதன் அலுவற்பணிகளும், அதனோடு தொடர்புடைய விவரங்களும் .


3. பெருநகர் திட்டக்குழு.
4. தலைவர், துணைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் காலியிடத்தை நிரப்புதல்.
5. குழு உறுப்பினர்களின் தேர்தல்.
6. குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்கான காலஅளவும் படித்தொகையும்.
7. செல்லத்தக்கதாக்குதல்.
8. குழுவின் கூட்டம்.
9. துணைக்குழுக்கள்.
10. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

## அத்தியாயம் –III
## பல்வகை

11. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.
12. பெருநகர் திட்டக் குழுவிற்கு உதவி செய்வதற்கான அதிகாரஅமைப்பு.
13. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

## அத்தியாயம் –IV
## 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

14. பிரிவு 3 இக்கான திருத்தம்.

# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழுச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 30/2009)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப்பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**பெருநகர் பரப்பிடத்திற்கான மேம்பாட்டுத் திட்டத்தின் வரைவினைத் தயாரிப்பதற்காக, தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பெருநகர் பரப்பிடம் ஒவ்வொன்றிலும் பெருநகர் திட்டக் குழுவை அமைத்துருவாக்குவதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

### அத்தியாயம்–I

### முன்னுரை

1. **குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.**– (1) இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழுச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.**–இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(a) "அரசமைப்பு" என்பது, இந்திய அரசமைப்பு எனப் பொருள்படும்;

(b) "மாவட்டம்" என்பது, தமிழ்நாடு மாநிலத்திலுள்ள ஒரு வருவாய் மாவட்டம் எனப் பொருள்படும்;

(c) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(d) "பெருநகர் பரப்பிடம்" என்பது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பெருநகர் பரப்பிடம் ஒன்று என்பதாக அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கப்படக்கூடிய, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நகராட்சிகள் அல்லது ஊராட்சிகள் அல்லது அவற்றை ஒட்டி அமைந்த பிற பரப்பிடங்களைக் கொண்டிருக்கிற, பத்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற பரப்பிடம் ஒன்று எனப் பொருள்படும்;

(e) "நகராட்சி" என்பது, அரசமைப்பு 243-Q அமைப்புவிதியின்படி அமைத்துருவாக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனம் ஒன்று எனப் பொருள்படும்;

(f) "ஊராட்சி" என்பது, அரசமைப்பு 243-B அமைப்புவிதியின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சி எனப் பொருள்படும்;

(g) "மக்கள் தொகை" என்பது, கடைசி மக்கள் தொகை கணக்கெடுப்பில் உறுதி செய்யப்பட்டு, வெளியிடப்பட்ட தொடர்புடைய இலக்கங்கள் எனப் பொருள்படும்.

## அத்தியாயம் – II
## பெருநகர் திட்டக்குழுவை அமைத்துருவாக்குதலும், அதன் அலுவற்பணிகளும், அதனோடு தொடர்புடைய விவரங்களும் .

**3. பெருநகர் திட்டக்குழு.–** (1) பெருநகர் பரப்பிடம் முழுவதற்கும் மேம்பாட்டுத் திட்ட வரைவு ஒன்றினைத் தயாரிப்பதற்கு அரசு தீர்மானிக்கக் கூடியவாறு தலைவர் ஒருவர், துணைத்தலைவர் ஒருவர் உள்ளிட்ட அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டு (இதன் பின்பு குழு எனக் குறிப்பிடப்படுவதான) பெருநகர் திட்டக்குழு ஒன்று, பெருநகர் பரப்பிடம் ஒவ்வொன்றிலும் அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், அந்தப் பெருநகர் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளின் மற்றும் ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கு இடையே உள்ள விகிதாச்சாரத்திற்கு ஏற்ப பெருநகர் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் ஊராட்சிகளின் தலைவர்களாலும் அவர்களுக்கிடையேயிருந்து அக்குழுவின் உறுப்பினர்களில் மூன்றுக்கு இரண்டுபங்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்குக் குறையாத அளவில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவில், இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் மற்றும் அக்குழுவிற்கு ஒதுக்கி அளிக்கப்பட்டுள்ள அலுவற்பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையானது எனக் கருதப்படக்கூடிய அத்தகைய அமைப்புகளின் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதித்துவமானது அரசினால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(3) குழுவானது, அரசு அறிவிக்கையின் வாயிலாக அதற்கு ஒதுக்கி அளிக்கக்கூடியவாறு, பெருநகர்

பரப்பிடத்திற்கான திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பான அலுவற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

(4) குழுவானது, மேம்பாட்டுத் திட்ட வரைவினைத் தயாரிப்பதில்,–

(a) (i) பெருநகர் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளாலும் ஊராட்சிகளாலும் தயாரிக்கப்பட்ட திட்டங்கள்;

(ii) அப்பரப்பிடத்தின் ஒருங்கிணைந்த இடவசதியை திட்டமிடுதல், நீரையும், பிற இயற்பொருள் சார்ந்த இயற்கை வளங்களையும் பங்கிடுதல், கட்டமைப்பிற்கான மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த மேம்பாடு ஆகியன உள்ளடங்கலாக, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் இடையேயான பொதுநலன் என்பதாக அமைந்த விவரங்கள்;

(iii) இந்திய அரசினாலும், மாநில அரசினாலும் குறிப்பிட்டு வரையறை செய்யப்பட்ட ஒட்டுமொத்தமான குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள்;

(iv) இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் முகவாண்மைகளால், பெருநகர் பரப்பிடத்தில் பெரும்பாலும் செய்யப்படக் கூடிய முதலீடுகளின் அளவு மற்றும் தன்மை மற்றும் நிதி அல்லது பிறவகையில் அமைந்த பிற கிடைக்கத்தக்க வள ஆதாரங்கள்

ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்;

(b) அரசு ஆணையின் வாயிலாகக் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய நிறுவனங்களையும் அமைப்புகளையும் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு குழுவின் தலைவரும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தை அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

**4. தலைவர், துணைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் காலியிடத்தை நிரப்புதல்.–** (1) ஒவ்வொரு குழுவின் தலைவர், துணைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோர் அரசினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) குழுவின் தலைவர், துணைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்கான காலஅளவும் பிற பணி நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(3) குழுவின் தலைவர், துணைத் தலைவர், அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரல்லாத பிற உறுப்பினர் எவரொருவரின் பதவியில் உள்ள காலியிடம் எதுவும் அரசினால் செய்யப்படும் புதிய நியமனம் மூலமாக நிரப்பப்பட வேண்டும்.

**5. குழு உறுப்பினர்களின் தேர்தல்.–**குழுவின் உறுப்பினர்களின் தேர்தலுக்கான முறையும் அது தொடர்பான விவரங்கள் அனைத்தும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**6. குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்கான காலஅளவும் படித்தொகையும்.–** குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட

தேதியிலிருந்து ஐந்தாண்டுக் கால அளவு ஒன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அக்குழுவின் அல்லது துணைக்குழுவின் கூட்டத்திற்கு வருகை புரிவதற்கு, வகுத்துரைக்கப்படும் படித்தொகையைப் பெறுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால் அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரும், நகராட்சி ஒன்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக அல்லது ஓர் ஊராட்சித் தலைவராக இருப்பது அற்றுப் போவதன் பேரில், ஐந்தாண்டுக் காலஅளவானது முடிவடைந்திருக்கவில்லை என்ற போதிலும், குழுவின் உறுப்பினரொருவராக இருப்பது அற்றுப் போதல் வேண்டும்; மற்றும் அக்காலியிடமானது வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்தல் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

7. **செல்லத்தக்கதாக்குதல்.–** குழுவில், தொடக்க நிலையிலிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ காலியிடம் எதுவும் இருந்தது என்ற காரணத்திற்காகவோ அல்லது அக்குழுவை அமைத்துருவாக்குவதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்திற்காகவோ குழுவின் செயற்பாடு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லத்தகாதது ஆகவோ அல்லது ஆட்சேபத்திற்கு உரியதாக ஆகவோ கூடாது.

8. **குழுவின் கூட்டம்.–** (1) குழுவானது வகுத்துரைக்கப்படுகிற அத்தகைய இடங்களிலும், அத்தகைய நேரங்களிலும் கூடுதல் வேண்டும்; மற்றும் (கூட்டம் ஒன்றுக்கான குறைவெண் வரம்பு உள்ளிட்ட) அதன் கூட்ட அலுவல் நடவடிக்கை தொடர்பான அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) தலைவர் ஏதேனும் காரணத்தினால் கூட்டம் எதிலும் கலந்து கொள்ள இயலாமல் இருப்பாரானால் துணைத்தலைவர் அல்லது இருவரும் ஏதேனும் காரணம் எதற்காகவும் கூட்டம் எதிலும் கலந்து கொள்ள இயலாமல் இருப்பார்களானால் வந்திருக்கிற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற உறுப்பினர் எவரும் கூட்டத்திற்குத் தலைமைதாங்க வேண்டும்.

9. **துணைக்குழுக்கள்.–** (1) குழுவானது, அது தேவையானதென அல்லது உகந்ததெனக் கருதக்கூடியவாறு, குழு உறுப்பினர்களை முழுவதும் கொண்ட அல்லது பிற நபர்களை முழுவதும் கொண்ட அல்லது பகுதி அளவில் குழு உறுப்பினர்களையும், பகுதி அளவில் பிற நபர்களையும் கொண்ட எண்ணிக்கையிலான துணைக்குழுக்களை, அது கருதுகிறவாறான நோக்கத்திற்காக அமைத்து உருவாக்கலாம்.

(2) குழுவின் உறுப்பினர்கள் அல்லாத துணைக்குழு ஒன்றின் உறுப்பினர்களுக்கு அதன் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு, வகுத்துரைக்கப்படும் கட்டணங்களும் படித்தொகைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்–III

## பல்வகை

10. **இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயற்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால் அரசானது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் அந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலஅளவு முடிவுற்றதற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**11. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.**–அரசானது, குழுவிற்கு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதற்காக, அது தக்கதெனக் கருதுகிற பணிப்புரைகளை அவ்வப்போது வழங்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது குழுவின் கடமையாக இருத்தல் வேண்டும்.

**12. பெருநகர் திட்டக் குழுவிற்கு உதவி செய்வதற்கான அதிகாரஅமைப்பு.**– இந்தச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலுமோ, என்ன அடங்கியிருந்த போதிலும், 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) பிரிவு 9–Aஇன்படி அமைத்துருவாக்கப்பட்ட பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உள்ளிட்ட பிரிவு 11இன்படி அமைத்துருவாக்கப்பட்ட அதிகார அமைப்பு எதனையும், அரசானது அறிவிக்கை வாயிலாக மேம்பாட்டுத் திட்ட வரைவினைத் தயாரிப்பதில் திட்டக்குழுவிற்கு உதவி செய்வதற்கு நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பானது, பெருநகர் திட்டக்குழுவின் அலுவலகமாகவும் செயல்படுதல் வேண்டும்.

**13. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.**–

(1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் எதனையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில்

வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப் பட்டிருந்தால் தவிர, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் தவிர, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னரோ அல்லது அதனையடுத்த கூட்டத்தொடரிலோ அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால் அல்லது அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமானால், அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும், அல்லது நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமல் போவது எதுவும், அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச்

செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லும் தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம்–IV

## 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

**14. பிரிவு 3 இக்கான திருத்தம்.–** (1) (இதன் பின்பு 1919ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்(தமிழ்நாடு சட்டம் IV/1919) பிரிவு 3இல், கூறு (13–AA) விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) **பிரிவு 27–B யை விட்டுவிடுதல்** – 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) பிரிவு 27–B விட்டுவிடப்படுதல் வேண்டும்.